**சுருக்கம்**

நிருவாகம் – கருணை அடிப்படை நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி. பொ. ஷர்மிளா, க/பெ. (லேட்) திரு. அ. கார்த்திக் – அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு – இளநிலை உதவியாளராக பணி நியமனம் – 22.09.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை**

அரசாணை(3டி) எண்.1

நாள் 18.01.2023
சுபகிருது, தை 4
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பயிற்சித் துறைத் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்எண்.செ.மு.பதுத/774/2021, நாள் 27.08.2021.
3. பயிற்சி துறைத் தலைவரின் கடிதம் ந.க.எண்.பதுத/878/2021, நாள் 15.11.2022.

*****

**ஆணை:**

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையத்தில் உதவியாளராக பணியாற்றி வந்த திரு. அ. கார்த்திக் என்பவர் கடந்த 10.06.2021 அன்று காலமானதைத் தொடர்ந்து அவரது வாரிசுதாரர் (மனைவி) திருமதி. பொ. ஷர்மிளா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரியதன் பேரில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பயிற்சித் துறைத் தலைவரின் செயல்முறை ஆணையில் திருமதி. பொ. ஷர்மிளா (க/பெ. (லேட்) திரு. அ. கார்த்திக்) அவர்கள் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், ஈரோட்டில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனியர் 22.09.2021 முற்பகல் ஊதியநிலை-8, கலம்-1-ல் ரூ.19,500/- என்ற அடிப்படை ஊதியத்தில் மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையத்தில் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திருமதி. பொ. ஷர்மிளா, தற்காலிக இளநிலை உதவியாளரின் பணியினை, தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்படுவதற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், அன்னார் பணியில் சேர்ந்த நாளான 22.09.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யுமாறு பயிற்சித் துறைத் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

3. பயிற்சித் துறைத் தலைவரின் கருத்துருவினை மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களின்படி உரிய ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்து, ஆய்வுக்குப்பின் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருமதி. பொ. ஷர்மிளா அவர்கள் பூர்த்தி செய்துள்ள நிலையில் அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பயிற்சி துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அன்னார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 22.09.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.18367/க்யூ-2/2022-1, நாள் 16.12.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.3792281/ஜி2/2022, நாள் 04.01.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மைதிலி க.ராஜேந்திரன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
பயிற்சித் துறைத் தலைவர்,
"மகிழம்பூ", எண்.163/1, பி.எஸ். குமாரசாமி இராஜா சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
முதல்வர் / மாவட்ட வருவாய் அலுவலர்,
அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.
திருமதி. பொ. ஷர்மிளா,
இளநிலை உதவியாளர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்,
ஈரோடு மாவட்டம்.(பயிற்சி துறைத் தலைவர் வழியாக)

<u>நகல்</u>
மனித வள மேலாண்மைத் துறைச் செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
சென்னை-600 009.
தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் (ஜி) துறை, சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் (நி.சீ.II) துறை, சென்னை-600 009. (3 நகல்கள்)
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/1/2023

பிரிவு அலுவலர்

19.1.23